# குளித்தலை நகராட்சி

05.06.2020.ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் அவர்களின் மே–2020.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் மே–2020.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொரோனா(Covid-19) வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரைகளுக்கிணங்க, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கும் (தோராயமாக 30000) இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு கபசுர குடிநீர் சூரணம் வாங்கி வழங்கப்பட்டது. மேலும், இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் ஆகியோர் உபயோகப்படுத்து000ம் வகையில் தானியங்கி கைசுத்திகரிப்பு இயந்திரங்கள், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெளிக்க பயன்படும் ஹெர்பல் கிருமி நாசினி ECO Clean Plus-50 (Pharma Grade) ஆகியவைகள் கீழ்க்கண்ட நிறுவனங்கள்மூலம் அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்யப்பட்டது (அரசாணை கடிதம் எண்.74/J5(MA) Finance Salaries/2020, Dated:-01.04.2020 ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலைப்புள்ளி கோராமல் கொள்முதல் செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது). அதன்படி கபசுர குடிநீர் சூரணம், தானியங்கி சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் ஹெர்பல் கிருமி நாசினி வாங்கப்பட்டு செலவினங்கள் ரூ.1,44,530.00/–க்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனங்களின் பெயர் | பொருள்களின் விபரம் | செலவினத் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1) | Nethaji Pharmacy, Didigul | கபசுர குடிநீர் சூரணம் | 40950.00 |
| 2) | Staging Elements, Chennai | தானியங்கி கைசுத்திகரிப்பு இயந்திரம் | 64640.00 |
| 3) | Shri Sakthi Agency, Erode | ECO Clean Plus-50 (Pharma Grade) | 38940.00 |
| | | மொத்தம் | 1,44,530.00 |

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.463/2020/எச்1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக இந்து சமய அறநிலையத் துறை கடம்பர்கோவில் அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான புல எண்.712/1(பகுதி), 713/2,713/3.ல் உள்ள 4.76 ஏக்கர் நிலம் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு 1959.ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டப்பிரிவு 34.ன்கீழ், குளித்தலை நகராட்சிக்கு விற்பனை செய்ய இந்து சமய அறநிலையத் துறை ஆணையருக்கு அனுமதியளித்து வரப்பெற்ற சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(அநி.4–2) துறை அரசாணை(நிலை) எண்.90, நாள்–19.05.2020 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1954/2013/பி2)

..2..

பொருள்– 05. குளித்தலை நகராட்சியில் 2020–2021.ம் ஆண்டிற்கு, தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தித் திட்டம் (TURIP)கீழ், பழுதடைந்துள்ள சாலைகள் மேம்படுத்த ரூ.180.00 இலட்சத்திற்கு பணிகள் எடுத்து செய்வதற்கு விரிவான திட்ட அறிக்கை கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ.) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1) | பேராளம்மன்கோவில்தெருவில் உள்ள தார்சாலை, ஆண்டார்மெயின்ரோட்டில் உள்ள தார்சாலை, பழைய ஆஸ்பத்திரி சாலையில் உள்ள தார்சாலை, பேராளம்மன்கோவில் பின்புறம் உள்ள சிமெண்ட் சாலை, மணத்தட்டை மேலக்குடித் தெருவில் உள்ள சாலை மற்றும் அரசு பொது மருத்துவமனை கீழ்புறம் உள்ள சிமெண்ட் சாலை மேம்படுத்துதல். | 1.34 | 74.00 |
| 2) | பெரியார்நகர் குறுக்குத் தெருக்களில் உள்ள தார்சாலை, பெரியபாலத்தில் இருந்து மலையப்பநகர் வரை செல்லும் சிமெண்ட் சாலை, கந்தசாமிபிள்ளை தெருவில் உள்ள சாலை, சபாபதிநாடார் தெருவில் உள்ள சாலை மற்றும் வடக்கு மணத்தட்டையில் உள்ள சிமெண்ட் சாலை ஆகிய தார்சாலை மற்றும் தடுப்பு சுவர் கட்டி சிமெண்ட் சாலை மேம்படுத்தும் பணி செய்தல் | 1.00 | 106.00 |
| | | 2.34 | 180.00 |

மேற்கண்ட பணிகளுக்கு உரிய நிர்வாக அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.561/2020/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு, அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோவிலுக்கு சொந்தமான திருச்சி–கரூர் நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்துள்ள புல எண்.712/1, 713/2, 3.ல் 4.76 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தினை நகராட்சிக்கு விற்பனை செய்ய, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(அநி.4–2) துறை அரசாணை(நிலை) எண்.90, நாள்–19.05.2020.ன்படி இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலத்திற்கு நிலமதிப்பு ரூ.86,10,840/– மற்றும் அந்நிலத்திலுள்ள மரங்களின் மதிப்பு ரூ.72,100/–, ஆக கூடுதல் ரூ.86,82,940/– (ரூபாய் எண்பத்து ஆறு லட்சத்து எண்பத்து இரண்டு ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) தொகையினை நில மதிப்பாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான நில மதிப்பினை செலுத்துவதற்கு நகராட்சி நிதி நிலை திருப்திகரமாக இல்லை. ஆனால், நகராட்சிக்கு கட்டுப்பட்ட கல்வி நிதிக் கணக்கில் ரூ.80,00,000/– (ரூபாய் எண்பது லட்சம்) உள்ளது. இந்நகராட்சி கட்டுப்பாட்டில் பள்ளிகள் ஏதும் இல்லாததால், பள்ளிகள் பராமரிப்பிற்காக கல்வி நிதியில் செலவு செய்யவேண்டிய அவசியம் இல்லை. எனவே, கல்வி நிதிக்கணக்கில் உள்ள ரூ.80,00,000/–ஐ (ரூபாய் எண்பது லட்சம் மட்டும்) புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான நில மதிப்பினை செலுத்துவதற்காக பயன்படுத்திக்கொள்வதற்கும், மேற்கண்ட கல்வி நிதியை பொது நிதிக்கு மாற்றிக்கொள்வதற்கும், மேற்படி நிலத்தினை வாங்குவதற்குரிய நிர்வாக அனுமதி வழங்குவதற்கும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1954/2013/பி2)

..3..

பொருள்– 07. குளித்தலை நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்க, அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோவிலுக்கு சொந்தமான இடம் புல எண்.712/1(பகுதி), 713/2, 3.ல் உள்ள 4.76 ஏக்கர் பரப்பளவு இடம் நகராட்சிக்கு விற்பனை செய்ய, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(அறி.4–2) துறை அரசாணை(நிலை) எண்.90, நாள்–19.05.2020.ல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விடத்திற்கு முன்பகுதியில் வடகிழக்குப் பகுதியில் குளித்தலை அருள்மிகு நீலமேகப்பெருமாள் திருக்கோவிலுக்கு சொந்தமான புல எண்.712/3.ல் 865–ச.மீ. நிலம் உள்ளது. இவ்விடம் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகாமையில் உள்ளதால், பேருந்துகள் வந்து செல்வதற்கும், போக்குவரத்திற்கும் ஏதுவாக இருக்கும் என்பதால், கூடுதலாக இவ்விடத்தையும் சேர்த்தால்தான் புதிய பேருந்து நிலையம் அமைக்க இயலும் என்பதால், கூடுதல் இடத்தை பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1954/2013/பி2)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி மணத்தட்டை கிராமம் புல எண்.59/2A.ல் கட்டுப்பட்ட 0.39.50.ஐ, திரு.K.S.கணேசன் என்பவருக்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி கடிதம் ந.க.எண்.4190/2018/திம2, நாள்–05.10.2018.ல், ம.வ.ந.ஊ.உ.இ.(திம2) எண்.694/2018.ல் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. வரன்முறைப்படுத்தப்பட்ட இம்மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடங்களை, நகராட்சிக்கு தான செட்டில்மென்ட் வழங்க, அரசாணை எண்.100, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நவ4(3), நாள்–01.07.2019.ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சிக்கு தானசெட்டில்மென்ட் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தின்படி, சாலை மற்றும் பூங்கா இடத்தை நன்கொடை பத்திரம் பதிவு செய்து நகராட்சிவசம் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3288/2018/பி2)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி, குளித்தலை வைகைநல்லூர்(வ) கிராமம் புல எண்.95/2F மற்றும் 96.ல் கட்டுப்பட்ட 5.76.ஐ, திரு.எஸ்.ரவி என்பவருக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி கடிதம் ந.க.எண்.93/2018/திம2, நாள்–16.04.2018.ல் ம.வ.(வ)/ந.ஊ.உ.இ.(திம) எண்.174/2018.ல் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. வரன்முறைப்படுத்தப்பட்ட இம்மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடங்களை, நகராட்சிக்கு தானசெட்டில்மென்ட் வழங்க, அரசாணை எண்.100, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள்–01.07.2019.ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சிக்கு தானசெட்டில்மென்ட் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தின்படி சாலை மற்றும் பூங்கா இடத்தை நன்கொடை பத்திரம் பதிவு செய்து நகராட்சிவசம் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1321/2018/பி2)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி, வைகைநல்லூர் வடக்கு கிராமம் புல எண்.209/6,7.ல் கட்டுப்பட்ட 1.49.ஐ, திருமதி.S.ஜெயந்தி என்பவருக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி கடிதம் 351/2018/திம2, நாள்–13.03.2018.ல், ம.வ.(வ)/ந.ஊ.உ.இ.(திம) எண்.110/2018.ல் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. வரன்முறைப்படுத்தப்பட்ட இம்மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடங்களை, நகராட்சிக்கு தானசெட்டில்மென்ட் வழங்க, அரசாணை எண்.100, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நவ4(3), நாள்–01.07.2019.ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சிக்கு தானசெட்டில்மென்ட் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலவலக குறிப்பு– நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தின்படி சாலை மற்றும் பூங்கா இடத்தை நன்கொடை பத்திரம் பதிவு செய்து நகராட்சிவசம் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.875/2018/பி2)

..4..

பொருள்– 11. குளித்தலை நகராட்சி, வைகைநல்லூர் வடக்கு கிராமம் புல எண்.64/1,3.ல் 1.34 ஏக்கர் பரப்பளவு திரு.G.தனசேகரன் என்பவருக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி கடிதம் ந.க.எண்.192/2018/திம2, நாள்–02.08.2018.ல், ம.வ.(வ)/ந.ஊ.உ.இ.(திம) எண்.403/2018.ல் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. வரன்முறைப்படுத்தப்பட்ட இம்மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடங்களை, நகராட்சிக்கு தானசெட்டில்மென்ட் வழங்க, அரசாணை எண்.100, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நவ4(3), நாள்–01.07.2019.ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சிக்கு தானசெட்டில்மென்ட் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலவலக குறிப்பு– நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தின்படி சாலை மற்றும் பூங்கா இடத்தை நன்கொடை பத்திரம் பதிவு செய்து நகராட்சிவசம் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2674/2018/பி2)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி பகுதியிலான தெருவிளக்கு உபகரணங்கள் 2020–2021.ஆம் ஆண்டிற்கு ரூ.9.40 லட்சம் மதிப்பீட்டில் சப்ளை செய்யும் பணிக்கு 22.05.2020.ல், 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி 2020–2021.ஆம் ஆண்டிற்கான தெருவிளக்கு உபகரணங்கள் சப்ளை செய்யும் பணி மேற்கொள்ளுதல் | 1). M/s.நந்தினி ஏஜன்ஸிஸ்,<br>15,பெரியபாலம், குளித்தலை. | 0.09 % குறைவு |
| | | 2). பாண்டியன் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>மணப்பாறைரோடு,<br>5,திருச்சி மெயின்ரோடு, குளித்தலை. | 0.39 % அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). வரிசை எண்.1.ல் ஆன M/s.நந்தினி ஏஜன்ஸிஸ் நிறுவனத்தாரின் குறைந்த மதிப்பீட்டு சதவீதத்திலான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.505/2020/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

05.06.2020.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 23 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 2 | 2 | 24 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 3 | 3 | 25 | அனுமதிக்கலாம். |
| 4 | 4 | 26 | பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. |
| 5 | 5 | 27 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 6 | 6 | 28 | அனுமதி வழங்கலாம். |
| 7 | 7 | 29 | அனுமதி வழங்கலாம். |
| 8 | 8 | 30 | அனுமதி வழங்கலாம். |
| 9 | 9 | 31 | அனுமதிக்கலாம். |
| 10 | 10 | 32 | அனுமதி வழங்கலாம். |
| 11 | 11 | 33 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 12 | 12 | 34 | அனுமதி வழங்கப்படுகிறது. |

ஒம்/—இரா.மோகன்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.